**கவனிக்க.**- 2010.07.23 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.
**கவனிக்க.**- இவ்வர்த்தமானியின் பகுதி IV (அ) மற்றும் IV (ஆ) ஆகியன சிங்கள மற்றும் ஆங்கில மொழியில் தனியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1665 - 2010 ජූලි මස 30 වැනි සිකුරාදා - 2010.07.30
*1665 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1250 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1256 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, ஓகத்து மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, யூலை மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
கொழும்பு 8,
*2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# பதவிகள் - வெற்றிடம்

## *ரிதிமாலியத்த பிரதேச சபை*

*வீதி ஊழியர் பதவி*

*ரிதிமாலியத்த பிரதேச சபையின் வெற்றிடம் நிலவும் மேற்குறிப்பிடப்படும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக இதில் குறிப்பிடப்படும் தகுதிகளைப் பூர்த்திசெய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படும். தற்பொழுதும் அரச/மாகாண அரச சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து தனது திணைக்களத் தலைவர்கள் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும்.*

**சேவையில் ஈடுபடுவதற்கான நிபந்தனைகள் :**

(1) இப்பதவி நிரந்தரமானது ; ஓய்வூதிய முறையை அடிப்படையாகக் கொள்ளப்படும்.
(2) மூன்று வருட தகுதி காலத்திற்கு உட்பட்டதாகும்.
(3) ஊவா மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினாலும் இப்பிரதேச சபையினாலும், அவ்வப்போது வெளியிடப்படும் கட்டளைகளுக்கும் தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கேற்ப அமைதல் வேண்டும்.

**தேவையான ஏனைய தகுதிகளும் அனுபவமும் :**

(1) விண்ணப்பதாரர்கள் வம்சாவழி மூலம் அல்லது பதிவின் மூலம் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(2) நல்ல குணநலம் உடையவராகவும், தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
(3) ஊவா மாகாணத்திற்குள் மூன்று (3) வருடங்களுக்கு குறையாத நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும்.
(4) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவராகவும், 45 வயது மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
(5) உரிய பதவிகளில் சேவையாற்றிய அனுபவம் விசேட தகைமையொன்றாக கருதப்படும்.

**வெற்றிடங்களின் எண்ணிக்கை** : 02 (இரண்டு)
**ஊதியத்தின் அளவு** : மாதாந்தம் ரூபா 11,730 - 10x120 - 10x130 - 10x145 - 12x160 ரூபா 17,600 (அ. நி. சுற்றறிக்கை 06/2006 (iv) 01 2006 ஏ)

**கல்வித் தகைமைகள்.**- எட்டாம் தரம்/ஒன்பதாம் தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

கீழ்க்குறிப்பிடப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைய தயாரிக்கப்பட்டு, பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2010.08.25 ஆந் திகதியன்று அல்லது அதற்குமுன் கிடைக்கக்கூடிய வகையில், "தலைவர், ரிதிமாலியத்த பிரதேச சபை, ரிதிமாலியத்த" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

எச். எம். உபாலி சேனாரத்ன,
ரிதிமாலியத்த பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ரிதிமாலியத்த,
2010.07.06.

*மாதிரி விண்ணப்பப்படிவம்*

**ரிதிமாலியத்த பிரதேச சபை**

.................................................................................................................... பதவி

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :----.
முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் :----.

2. அஞ்சல் முகவரி :----.

3. பிறந்த திகதி :

ஆண்டு ...................... மாதம் ....................... திகதி .....................

4. விண்ணப்ப இறுதித் திகதியன்று வயது :-

வருடங்கள் : ...................... மாதங்கள் : ........................ நாட்கள் : .......................

5. விண்ணப்ப இறுதித் திகதியன்று ஊவா மாகாணத்திற்குள் வதியும் காலம் ? :----.

6. நீர் இலங்கைப் பிரசையா ? :----.

இலங்கைப் பிரசையாயின் வம்சாவழி மூலமா அல்லது பதிவு மூலமா ? :----.

7. வசிக்கும் மாவட்டம் :----.

8. பால் :----.

9. திருமணமானவரா ?/திருமணமாகாதவரா ? :----.

10. நீர் ஏதேனும் குற்றமொன்றுக்காக நீதிமன்றமொன்றில் தண்டனை பெற்றுள்ளீரா ? அவ்வாறெனில், அதுபற்றிய விபரங்களைக் குறிப்பிடவும் :----.

11. கல்வித் தகைமைகள் :----.

12. அனுபவமும்/வேறு தகைமைகளும் :----.

இவ்விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு எட்டியவரையில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் கௌரவத்துடன் வெளிப்படுத்துகின்றேன். மேற்குறிப்பிட்ட தகவல்கள் ஏதும் பொய்யானது என கண்டுபிடிக்கப்பட்டால் நான் ஆட்சேர்க்கப்படுவதற்கு தகைமையற்றவன் எனவும் நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்குள்ளாவேன் எனவும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

(அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர் எனின், திணைக்களத் தலைவர் பின்வரும் சான்றிதழை வழங்க வேண்டும்.)

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

இவ்விண்ணப்பதாரரான திரு. ........................................... என்பவர் தற்போது இத்திணைக்களத்தில்/நிறுவனத்தில் .................................. ஆக சேவையாற்றுகின்றார். கடந்த சில வருடங்களில் சகல சம்பளவேற்றங்களையும் அவர் பெற்றுள்ளார். அவர் எவ்வித ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் (எச்சரிக்கை தவிர்ந்த) ஆளாகவில்லை எனவும், பதவியொன்று பொருட்டு தெரிவுசெய்யப்படின் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து அவரை விடுவிக்க முடியும்/முடியாது எனவும் மேற்குறிப்பிட்ட தகவல்கள் உண்மையானவை, சரியானவை எனவும் சான்றுபடுத்துகின்றேன்.

----,
திணைக்கள/நிறுவனத் தலைவரின்
அல்லது அதிகாரமளிக்கப்பெற்ற
அலுவலரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவிப்பெயர் :----.
திணைக்களம்/நிறுவனம் :----.
திகதி :----.

7-866

## களுத்துறை பிரதேச சபை

### பதவி வெற்றிடங்கள்

களுத்துறை பிரதேச சபையில் பதவி வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளமையால் கீழ்க்காணப்படும் பதவிகட்காக தகுதியானவர்களை தெரிவுசெய்வதற்கு முறையான தகைமைகள் உள்ள களுத்துறை பிரதேச சபை நிர்வாக பிரதேசத்திற்குள் நிரந்தர வசிப்பாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இல. | பதவி எண்ணிக்கை | பதவிப்பெயர் | சம்பள முறை | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 01 | 01 | வருமான நிர்வாகி- தரம் II | ரூ. 12,940-120X10-140X11-210X10-290X10 ரூபா 20,660-4 ஆவது சம்பள உயர்வுக்கு முன் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | சிரேட்ட பாடசாலை தராதரப்பத்திரம் அல்லது க. பொ. த. (சா. தரம்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது எண்கணிதம்/ தூய கணிதம்/ வர்த்தக எண்கணிதம்/கணிதம் மற்றும் சிங்களம்/ தமிழ் மொழி உட்பட 6 பாடங்களில் இரண்டு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தி பெற்றி ருத்தல் மற்றும் மேல் மாகாணத்திற்குள் பிரதேச நிர்வாக நிறுவனங்களின் 5 வருட சேவை அனுபவத்துடன் நிரந்தர பதவி பெற்றிருத்தல் வேண்டும்.<br>அல்லது<br>சிரேட்ட பாடசாலை தராதரப்பத்திரம் அல்லது க. பொ. த. (சா. தரம்) பரீட்சையில் இரு தடவைக்கு மேற்படாது கணிதம்/ தூயகணிதம்/ வர்த்தக எண் கணிதம்/ கணிதம் மற்றும் சிங்களம்/ தமிழ் மொழி உட்பட 5 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் இரண்டு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் சித்திபெற்றிருக்க வேண்டும். |
| 02 | 01 | அலுவலக உதவியாளர் | மாதாந்த சம்பளம் : ரூபா 11,730-10X120-10X130-10X145-12X160-ரூபா 17,600 வினைத்திறன்காண் தடைப் பரீட்சை 7 ஆவது சம்பள முறை ரூபா 13,840 பெறுவதற்கு முன் இந்த சம்பள முறையில் 12 ஆவது முறை ரூபா 13,060 தொடக்க படிமுறை என கருதப்படுதல் வேண்டும். | கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர) பரீட்சையில் ஒரு தடவையில் ஏதாவது 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். |
| 03 | 01 | வீதி திருத்தல் இயந்திர நடத்துனர் | மாதாந்த சம்பளம் : ரூபா 12,210-10X130-10X145-10X160-12X170-ரூபா 18,600. வினைத்திறன்காண் தடைதாண்டிய பரீட்சை 4 ஆவது வருடாந்த சம்பள உயர்வுக்கு (ரூபா 12,600)முன் | தேசிய பொது கல்விச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது க.பொ.த.(சா.தரம்) பரீட்சையில் ஏதாவது 2 பாடம் சித்தி பெற்றிருத்தல்<br>மற்றும்<br>இந்த வெற்றிடத்துக்கு பொருத்தமான குறைந்தது 2 வருட அனுபவம் பெற்றிருத்தல் (அரச பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் சான்றிதழ் வழங்கப்பட வேண்டும்). |
| 04 | 01 | வாசிகசாலை ஊழியர் | மாதாந்த சம்பளம் : ரூபா 11,730-10X120-10X130-10X145-12X160-ரூபா 17,600 வினைத்திறன்காண் தடை 4 ஆவது சம்பள முறை (ரூபா 12,090) தொடங்கும் முன் | குறைந்தபட்சம் 8 ஆவது வகுப்பு சித்தி பெற்றிருத்தல் வேண்டும். |

| இல. | பதவி எண்ணிக்கை | பதவிப்பெயர் | சம்பள முறை | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 05 | 01 | சுகாதார ஊழியர் | மாதாந்த சம்பளம் : ரூபா 11,730-10X120-10X130-10X145-12X160-ரூபா 17,600 வினைத்திறன்காண் தடை 4 ஆவது சம்பள முறை (ரூபா 12,090) தொடங்கும் முன் | கல்வி தகுதிகள் கருத்திற்கொள்ளப்படுவது இல்லை |

**தேர்ந்தெடுப்பதற்கான விதிமுறைகள் :**

(1) விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல்

(2) விண்ணப்பதாரர் மேல் மாகாண எல்லைக்குள் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் முடிவுத் திகதிக்கு முன் 3 வருட நிரந்தர வதிவிடத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் முடிவுத் திகதிக்குள் 18 வயது குறையாமலும் 45 வயதுக்கு கூடாமலும் இருத்தல் வேண்டும்.

(4) விண்ணப்பதாரர் நல்ல உடல் சுகாதாரத்துடன் காணப்படல்.

(5) களுத்துறை பிரதேச சபையில் தற்பொழுது தற்காலிகமாக, ஒப்பந்த அடிப்படையில், விரும்பத்தக்க, பொறுப்பேற்கும் (வேலை ஒன்று) சேவை புரியும் சேவையாளர்கள் இருப்பின் முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

(6) விண்ணப்பப்பத்திரம் விண்ணப்பித்ததன் பிறகு அல்லது பெறும் காலப்பகுதியில் இந்த தேர்ந்தெடுப்பு தாமதித்தல் அல்லது மாற்றம் ஏற்படுத்தல், விண்ணப்பத்தை நிராகரித்தல் அல்லது மீள் பரிசீலனை செய்தல் களுத்துறை பிரதேச சபையின் செயலாளருக்கு உரித்தாகும்.

**சேவை வழங்கப்படும் விதிமுறைகள் :**

(1) இந்த நியமனம் நிரந்தரமானது ; ஓய்வூதியத்துக்கு உரித்துடையது.

(2) நியமனம் 3 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது.

(3) இத்தெரிவு செய்யும் முறையானது விதிமுறைகள் மற்றும் சுற்றுநிருபத்திற்கு அப்பால் இலங்கை தாபனவிதிக் கோவை விதிமுறைகளுக்கும் அரச திணைக்கள கட்டளைகளுக்கு மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் அல்லது களுத்துறை பிரதேச சபையினால் தொடர்ந்து வெளியிடப்படும் விதிமுறைகள் மற்றும் கட்டளைகளுக்கும் ஏற்றவாறு நடப்பதற்கு உடன்படல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை.**- இந்த அறிவித்தலில் உள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவாக 12 "X8" அளவில் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட்டு விண்ணப்பிக்கும் வெற்றிட பெயரை உரிய அஞ்சல் உறையின் இடதுபக்க மேல் மூலையில் எழுதி, 2010.08.13 ஆந் திகதிக்கு முன் "செயலாளர், களுத்துறை பிரதேச சபை, காலி வீதி, வஸ்கடுவை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணபத்துடன் கீழ்காணப்படும் பிரதிகள் அனுப்பப்படல் வேண்டும் :-

(1) பிறப்புச் சான்றுப்பத்திரம்
(2) கல்விச் சான்றிதழ்
(3) வதிவிட உறுதிச் சான்றிதழ்
(4) அண்மையில் பெற்ற கிராமசேவகர் சான்றிதழ்
(5) அண்மையில் பெறப்பட்ட நற்குண சான்றிதழ்கள் இரண்டு

கீதானி டி லொகுவெல்ல,
செயலாளர்,
களுத்துறை பிரதேச சபை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**களுத்துறை பிரதேச சபை**

........................................................................................................ பதவி

1. (அ) முதல் எழுத்துடன் பெயர் :----.
(ஆ) முழுப்பெயர் :----.

2. முகவரி :----.

F2-B79889 (T)

3. பிறந்த திகதி :

ஆண்டு ...................... மாதம் ....................... திகதி .....................

4. பால் (பெண்/ஆண்) :----.

5. திருமணமானவர்/திருமணமாகாதவர் :----.

6. இனம் :----.

7. நீங்கள் இலங்கைப் பிரசையா ? அப்படியானால் பரம்பரை வழியாகவா ? பதிவுசெய்யப்பட்டவரா என்பது ? :----.

8. கல்வித் தகுதிகள் :----.

9. நீங்கள் தற்பொழுதும் மாதிரி சேவையில் உள்ளவராயின் சேவைக்காலம் மற்றும் விபரம் ? :----.
(நிரந்தரம்/ஒப்பந்த அடிப்படை/தற்காலிகம்/மாதிரி/சலுகை அடிப்படையிலா ?)

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் சத்தியமானதும் உண்மையானதும் என உறுதிப்படுத்துகிறேன். இந்த தேர்ந்தெடுப்பு முறை பற்றி விதிமுறைகளின்படி என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் பிழையானவை என தெரியவரும் சந்தர்ப்பத்தில் தேர்வுக்கு முன்னரும் நியமனம் பெற்ற பின்னரும் சேவையில் இருந்து நீக்குவதற்கு அடிபணிவேன் என அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

7-957

---

**தொம்பே பிரதேச சபை**

மேல் மாகாண அரச சேவையில் நிலவும் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்தல்

மேல் மாகாண அரச சேவையில் தொம்பே பிரதேச சபையில் தற்போது வெற்றிடமாகவுள்ள பின்வரும் உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக, மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிப்பிடத்தைக் கொண்ட தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் இங்கு கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க, தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்து, "செயலாளர், தொம்பே பிரதேச சபை, கிரிந்திவளை" என்ற முகவரிக்கு 2010.08.20 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

| தொடர் இல. | பதவியின் பெயர் | வெற்றி டங்களின் எண் ணிக்கை | சம்பளத் திட்டம் | ஆகக்குறைந்த தகைமை |
|---|---|---|---|---|
| 01 | மருந்துக் கலவை யாளர் | 01 | ரூபா 12,470-10X130-10X145-10X160-12X170-ரூபா 18,860 (பீஎல்3-2006/ஏ) 3 ஆவது சம்பளப் படிமுறைக்கு முன்னர் வினைத்திறன் தடை தாண்டலுக்குத் தோற்ற வேண்டும். | (1) (அ) சிரேஷ்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் எண்கணிதம்/ தூயகணிதம்/ வர்த்தக எண்கணிதம்/ கணிதம் மற்றும் சிங்களம்/தமிழ் மொழி உள்ளிட்ட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அல்லது (2) தேசிய கல்விப் பொதுச் சான்றிதழ் பரீட்சையில் ஒரே தடவையில் சிங்களம்/ தமிழ் மொழி உள்ளிட்ட 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அத்துடன் |

| தொடர் இல. | பதவியின் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பளத் திட்டம் | ஆகக்குறைந்த தகைமை |
|---|---|---|---|---|
| | | | | (3) அரச ஆயுர்வேத வைத்தியசாலை ஒன்றில் அல்லது அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியசாலை ஒன்றில் ஏதாவது ஒரு பதவியில் ஒரு வருடத்திற்குக் குறையாத காலம் அனுபவம் பெற்றிருத்தல் |
| 02 | காவலாளி | 02 | ரூபா 11,730-10X130-10X145-12X160-ரூபா 17,600 (பீ.எல்.-1-2006/ஏ) இச்சம்பளத் திட்டத்தின் 12 ஆவது சம்பளப் படிமுறை (13,060) படிமுறையாக அமையும். ஏழாவது சம்பளப் படிமுறைக்கு முன்னர் செயற்திறன் தடை தாண்டலுக்குத் தோற்ற வேண்டும். | (1) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே தடவையில் ஏதாவது ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் |
| 03 | தகன மண்டபம் இயக்குபவர் | 01 | சம்பளத்திட்டம் பீ.எல்.-2-2006ஏ-ரூபா 12,210-10X130-10X145-10X160-12X170-ரூபா 18,600 நான்காவது சம்பளப் படிமுறைக்கு முன்னர் செயற்திறன் தடை தாண்டலுக்கு தோற்ற வேண்டும். | (1) (அ) ஆகக்குறைந்தது தரம் 8/9 ஆம் ஆண்டு சித்தியடைந்திருத்தல் அத்துடன் (ஆ) பதவியுடன் தொடர்புடையதாக ஆகக்குறைந்தது 2 வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல் (நிறுவனத் தலைவரினால் வழங்கப்பட்ட சான்றிதழ் அவசியம்) |
| 04 | மின்சாரத் தொழிலாளி | 01 | சம்பளத் திட்டம் பீ. எல்.-1-2006ஏ, ரூபா 11,730-10X120-10X130-10X145-12X160-ரூபா 17,600. நான்காவது சம்பளப் படிமுறைக்கு முன்னர் செயற்திறன் தடை தாண்டலுக்குத் தோற்ற வேண்டும். | (1) (அ) ஆகக்குறைந்தது தரம் 8/9 ஆம் ஆண்டு சித்தியடைந்திருத்தல் |

**1. தேவையான ஏனைய தகைமைகள் :**

(அ) விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல்

(ஆ) விண்ணப்பதாரர் விண்ணப்பிப்பதற்கு முந்திய அண்மித்த 3 வருடங்கள் மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசித்ததை உறுதிப்படுத்துதல் வேண்டும்

(இ) மேல் மாகாணத்தில் தொம்பே பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் வசிப்பவர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்

(ஈ) 2010.08.20 ஆந் திகதிக்கு 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (தற்போது மாகாண அரச சேவையில் உள்ளோருக்கு இந்த வயதெல்லை ஏற்புடையதாகாது)

(உ) தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டு தண்டனை பெற்றவராக இருத்தல் கூடாது

(ஊ) சிறந்த நடத்தை உடையவராகவும் உடல் ஆரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்

(எ) தற்போது சேவையில் உள்ளவர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்

**2. சேவையில் சேர்ப்பதற்கான நிபந்தனைகள் :**

(1) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியச் சம்பளம் கொண்டதுமாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதியச் சம்பளத் திட்டத்துக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

(2) 3 வருட தகைமைகாண் காலத்திற்கு உட்பட்டதாக நியமனம் வழங்கப்படும்.

இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கு மேலதிகமாக இலங்கை அரசின் தாபன விதிக்கோவையின் ஒழுங்குவிதிகள் மற்றும் நிதி ஒழுங்குவிதிகளுக்கும் அரசாங்க திணைக்களக் கட்டளைகளுக்கும் சுற்றறிக்கைகளுக்கும் மேல் மாகாண சபை அல்லது தொம்பே பிரதேச சபையினால் காலத்துக்குக்காலம் பிறப்பிக்கப்படும் ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகளுக்கும் இணங்கிய முறையில் செயற்படுவதற்கு ஊழியர்கள் கடமைப்பட்டுள்ளனர்.

விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளையும் இணைத்து அனுப்புதல் வேண்டும் :-

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) கல்விச் சான்றிதழ் ;
(iii) பதிவை உறுதிப்படுத்தும் சான்றிதழ் ;
(iv) அண்மையில் பெறப்பட்ட நன்னடத்தைச் சான்றிதழ்கள் இரண்டு. இவற்றில் ஒன்று பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தரிடமிருந்து பெறப்படுதல் வேண்டும் ;
(v) ஏனைய தகைமைகளைக் காட்டும் சான்றிதழ்கள் ;
(vi) தொழில்/அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள்.

தேவை ஏற்படுமிடத்து, இப்பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதை இரத்துச்செய்யும் உரிமை தொம்பே பிரதேச சபைக்கு உள்ளது.

ஆர். பீ. சிரிமான்ன,
செயலாளர்,
தொம்பே பிரதேச சபை.

தொம்பே பிரதேச சபை தலைமையகம்,
கிரிந்திவளை,
2010.07.16.

7-1004

---

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**யாழ்ப்பாணம் மாநகரசபை**

*1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க களரிகளுக்கு உரிமம் அளித்தற் கட்டளைச் சட்டம்*

**6(சி) 1 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்**

இதன்கீழ் காட்டப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட நபர்கள் அவர்கள் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் அவர்களின் பெயருக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள களரிகளை 2010 ஆம் ஆண்டில் வைத்திருப்பதற்காக 1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க களரிகளுக்கு உரிமம் அளித்தல் கட்டளைச் சட்டத்தின்கீழ் 6(சி) 1 ஆம் பிரிவுக்கமைய இத்தால் அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

இத்தகைய உரிமம் அந்தக் களரி உரிமையாளர்களுக்கு வழங்கப்படுவதற்கு ஆட்சேபனை தெரிவிக்க விரும்பும் சொல்லப்பட்ட களரிகளுக்கு உத்தேசிக்கப்பட்டிருக்கும் வளவுக்கு அண்மையில் வதியும் எந்த ஆளும் அன்னாரின் ஆட்சேபனைக்கான காரணங்கள் பற்றிய எழுத்து மூலமான கூற்றொன்றினை இவ்வர்த்தமானியில் இவ் அறிவித்தல் வெளியிடப்படும் திகதியிலிருந்து நான்கு வாரங்களுக்குள் இணைப்பிரதிகளில் எனக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

செல்லையா சரவணபவா,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம் மாநகர சபை.

மாநகரசபை,
யாழ்ப்பாணம்,
2010.07.07.

| இல. | விண்ணப்பதாரியின் பெயரும் முகவரியும் | களரியின் தலைவரா, செயலாளரா, முகாமையாளரா என்பது | களரியின் பெயர் | களரி அதனது செயற்பாடுகளை நடாத்த உத்தேசித்திருக்கும் மனைத்தளம் |
|---|---|---|---|---|
| 1 | ஏ. ஏ. ஜான்ஸ்டின் இல. 68, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம் | செயலாளர் | செவண்லெவண் பொழுதுபோக்கு விளையாட்டுக்குழு | இல. 66, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம் |

7-803

**மாத்தறை மாநகரசபை**

குறைநிரப்பு வரவு செலவுத் திட்டப் பேரேடு - 2010/5

2010 ஆம் வருடத்திற்கான குறைநிரப்பி வரவு செலவுத் திட்டத்தின் 2010/5 ஆவது மதிப்பீட்டினை யூலை மாதம் 26 ஆந் திகதியிலிருந்து ஏழு நாட்களுக்கு பொதுமக்கள் பரிசீலனைக்காக இவ்வலுவலகத்தில் வெளிப்படையாக வைக்கப்பட்டிருக்கும் என்பதை மாநகரசபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அதிகாரத்தின்) 214 (2) (ஆ) பிரிவின்கீழ் இத்தால் அறியத்தருகின்றேன்.

எஸ். எம். டபிள்யூ. உபுல் நிசாந்த,
மாநகர சபை தலைவர்,
மாத்தறை மாநகரசபை.

மாநகர சபை,
மாத்தறை,
2010, யூலை 06.

7-805

---

**மாவத்தகம பிரதேச சபை**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம்

**14 ஆம் 24(2) ஆம் விதியின்கீழ் செய்யப்படுகின்ற அறிவித்தல்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24 ஆம் விதியின்கீழ் வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், மாவத்தகம பிரதேச சபையினால் இங்கு இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பாதையினை மாவத்தகம பிரதேச சபைக்குச் சொந்தமான பாதையாக வெளிப்படுத்தப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இந்தப் பாதை சம்பந்தமாக குறிப்பிட்ட காணிச் சொந்தக்காரர்களாக உரிமைகோரும் தரப்பினர்களினால் ஏதும் எதிர்ப்புக்கள் தெரிவிப்பதாயின் இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டு ஒருமாத கால எல்லைக்குள் தங்களது உரிமையினை உறுதிப்படுத்துவதற்காக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 14 ஆம் 24(2) ஆம் விதியின்கீழ் செயற்படும்படி இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இந்தக் கால எல்லைக்குள் ஏதும் எதிர்ப்புக்கள் முன்வைக்கப்படாதவிடத்து அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதையினை மாவத்தகம் பிரதேச சபைக்குச் சொந்தமான பாதையாக ஏற்றுக்கொண்டு பரிபாலனம் செய்யப்படும் என்று பொதுமக்கள் தெரிந்துகொள்வதற்காக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

எச். எஸ். கே. பி. மீகொல்ல,
தலைவர்,
மாவத்தகம பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மாவத்தகம,
2010.07.09.

**அட்டவணை**

பாதையின் பெயர் : மீ./மெத்தேகம்கொட புவக்வல்லாதெனிய பாதை
பாதையின் நீளம் : 1800 அடி
பாதையின் அகலகம் : 09-10 அடி
ஆரம்பம் : வட்டரெக்க இங்குருவத்தை பிரதான பாதை
முடிவு : திரு. எம். பி. கே. பி. நெவில் அவர்களின் வீட்டுக்கருகில்

*இடது :*

1. திருமதி ஆர். டி. சிரிமாவதி
2. திரு. ஆர். டி. அநுர ஜயரத்ன
3. திரு. எம். ஜே. விமலசேன
4. திரு. ஆர். ஏ. பிரேமதாஸ
5. திரு. ஆர். ஏ. ஆரியதாஸ
6. திரு. ஆர். ஏ. லயனல்
7. திரு. எம். வை. அஜித் ரனசிங்ஹ
8. திரு. என். ஜீ. ஜானக்க விமலரத்ன
9. திரு. ஆர். ஏ. சிரிசேன
10. திரு. எம். வை. பந்து
11. திரு. எம். வை. சேதரமன்
12. திரு. எம். வை. குணசிரி
13. திரு. எம். வை. குணசேன
14. திரு. எம். வை. சோமதாஸ
15. திரு. எம். வை. சரம்பா
16. திரு. எம். வை. சிரிசேன
17. திரு. எம். பீ. கே. நெவில்

*வலது :*

1. பிடியகந்த தோட்டம்

7-940

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.